LIBRARY, STATE LEGISLATURE
9 JUN 1964
MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Friday, 24th January 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Arrest of a Police Sub-Inspector

* 1 *S.N. Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether a Police Officer was arrested at Coimbatore district on 19th January 1964 for the violation of Prohibition laws?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

கனம் திரு. பூ. கக்கன் : ஆம்.

திரு. செ. மாதவன் : கனம் தலைவர் அவர்களே, இந்த ஸப்-இன்ஸ்பெக்டர் இவர் இருக்கக்கூடிய பகுதியிலே கள்ளச் சாராயம் அதிகமாக காய்ச்சுவதாலும், போலீஸார்கள் மாமூலாக லஞ்சம் வாங்கிக்கொண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுவதை விட்டுவிடுகிறார் கள், அது தனக்குப் பிடிக்கவில்லை, அதனால்தான் இப்படிச் செய் கிறேன் என்று அரசாங்கத்திற்கு ஏதாவது தெரிவித்திருக் கிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : என்னிடம் இருக்கிற தகவல்படி அவர் கள் மீது ஒரு டிஸ்மிஸல் சார்ஜ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பாக இந்த வேலைகளையெல்லாம் அவர்கள் ஆரம்பித்திருக் கிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வழக்கு விசாரணையில் இருப்பதனால் மேற்கொண்டு அது, இது என்று கேட்பது முறையல்ல.

திரு. செ. மாதவன் : இந்த ஸப்-இன்ஸ்பெக்டர் இந்தக் குற்றத் தைச் செய்வதற்கு முன்னாலேயே நான் இப்படிச் செய்யப் போகி றேன் என்று அறிவித்து விட்டது உண்மையா? அவர் அறிவித்த தற்குப் பின்னாலும்கூட அவர் மீது இலாகா மூலம் நடவடிக்கை எடுக்காமல் அவர் யூனிபார்முடன் இந்தக் குற்றத்தைச் செய் வதற்கு அரசாங்கம் ஏன் அனுமதித்தது ?

கனம் திரு. பூ. கக்கன் : அவர் மீது தக்க நடவடிக்கை எடுகக அரசாங்கம் உத்தேசித்திருந்தது. அதற்குள்ளே அவர் 'அப்ஸ்காண்டு' ஆகிவிட்டார். அவர் பிடிபடாத காரணத்தினாலே இம்மாதிரி ஏற்பட்டது.

STATE LEGISLATURE 9 JUN 1964

[24th January 1964

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த ஸப்-இன்ஸ்பெக்டருக்கு எவ்வளவு ஸர்வீஸ் ஆகிறது? இவர் ஸர்வீஸில் மற்ற வேலைகளை எப்படிச் செய்து வந்திருக்கிறார்?

கனம் சபாநாயகர் : அவர் மீது டிஸ்மிஸல் சார்ஜ் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர் ஸர்வீஸில் இதற்கு முன்னால் அவருடைய ரிகார்டு எப்படி இருக்கிறது?

கனம் சபாநாயகர் : ஏற்கனவே அவர் மீது டிஸ்மிஸல் சார்ஜ் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குக் கிடைத்த தகவல், ஒரு நொடோரியஸ் ஸ்மக்ளர் இவர்களோடு சேர்ந்தவர். கேஸ் போடுவதற்கு முன்னால் சேர்ந்தவர்கள் என்று ஒரு தகவல் இருக்கிறது.

திரு. செ. மாதவன் : இந்த ஸப்-இன்ஸ்பெக்டர் அவர்களுடைய ஸர்வீஸ் காலத்தில் அரசாங்கம் அவர்களுக்கு ஏதாவது வெகுமதி, அல்லது பதக்கம் அல்லது சர்டிபிகேட் கொடுத்திருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

கனம் சபாநாயகர் : வெகுமதி வாங்கினாலும், தவறு செய்தால் அகப்பட்டுவிடுவார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர்களுக்கு ஸர்வீஸ் எவ்வளவு ஆகிறது என்று கேட்டேன். விவரம் இல்லையா?

கனம் திரு. பூ. கக்கன் : என்னிடத்தில் தகவல் இல்லை.

MR. SPEAKER : He has become notorious.

திரு. செ. மாதவன் : இந்த ஸப்-இன்ஸ்பெக்டர் என்றைக்கு தான் இந்தக் குற்றத்தை செய்யப்போவதாக அறிவித்தார்? என்றைக்கு அவர் 'அப்ஸ்காண்டு' ஆனார்?

MR. SPEAKER : The Hon. Minister has already told that the matter is *subjudice*. By asking questions on all these points, the hon. Member wants to cross-examine.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் அறிந்த மட்டில் அந்த ஸப்-இன்ஸ்பெக்டருக்கு 15 வருஷங்களுக்கு மேலே ஸர்வீஸ் ஆகிறது என்று நினைக்கிறேன். அப்படியிருந்தாலும் இவ்வளவு காலமாக ஸப்-இன்ஸ்பெக்டராகவே அவர் எப்படி ஸர்வீஸ் செய்திருக்கிறார்?

கனம் சபாநாயகர் : அப்படி எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : 15 வருஷம் ஸர்வீஸ் உள்ளவர் திருட்டுச் சாராயம் காய்ச்சுவதற்கு முன்வந்தார். இதிலிருந்தே அவர் ஸர்வீஸ் எப்படி இருந்திருக்கும், தன்னுடைய கடமையை அவர் எவ்வாறு செய்திருப்பார் என்றெல்லாம் இப்பொழுது நினைக்கவேண்டியிருக்கிறது.

24th January 1964]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஈரோடில் அரெஸ்டு ஆன ஸப்-இன்ஸ்பெக்டர் அர்ஜுனன் என்பவர் 15 வருஷ காலம் ஸர்வீஸில் இருந்ததாக தெரியவருகிறது. இந்த 15 வருஷ காலத்தில் தன்னால் இயன்ற வரைக்கும் என்னென்ன செய்யவேண்டுமோ, அத்தனையும் செய்து பார்த்து, மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்த முடியாது, அது கண்டிப்பாக தோல்வியுறும் என்று அறிந்த காரணத்தினாலேதான் இந்தப் புரட்சியை அவர் செய்தார் என்பதைச் சர்க்கார் உணருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பேர்ப்பட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லாமல் இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மது விலக்குக் கொள்கையைப் பற்றியோ அல்லது மது விலக்கு நடைமுறையைப் பற்றியோ யாருக்கும் என்ன கருத்து வைத்திருப்பதற்கும் உரிமை உண்டு. அதைப் பற்றிச் சொல்லுவதற்கு உரிமை உண்டு. ஆனால், இந்த ஸப்-இன்ஸ்பெக்டருடைய நடத்தையைப் பற்றி நாம் இப்பொழுது ஆராயவேண்டியிருக்கிறது. இவர்மீது ஏற்கனவே சில குற்றச்சாட்டுகள் இருந்து, அவரை வேலையிலிருந்து நீக்கவேண்டும் என்று அவருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவை எத்தகைய குற்றச்சாட்டுகள், விவரம் என்ன என்பதை அறிவிக்கமுடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : He was impertinent, disobedient and misbehaving. அவர் அப்பேர்ப்பட்ட அடங்காப்பிடாரி. இன்ஸ்பக்டர் சொல்லுவதை கேட்காது செய்திருக்கிறார்கள். அதனால் அவர் மீது சார்ஜ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சாக்கடை நீரைப் பிரித்தல்

* 54 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ரசாயன முறைப்படி சாக்கடை நீரை வேறாகவும், கழிவைத் தனியாகவும் பிரிக்க ஏதாவது திட்டம் உண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Yes, on an experimental basis.

எர்ஸ்கின் மருத்துவ மனை (மதுரை)

* 81 கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் உள்ள அரசாங்க எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் படுக்கை வசதி போதாததால் நோயாளிகளை தரையில் படுக்க வைத்திருப்பது உண்மையா ?